செ.வெ.எண்: 23 நாள்:08.08.2016

# பத்திரிகைச் செய்தி

சமூக பாதுகாப்புத் துறையில் காலியாக உள்ள சி மற்றும் டி பிரிவு பணியிடங்களுக்கு தகுதியானவர்கள் விண்ணப்பிக்கலாம். சமூக பாதுகாப்புத்துறையில் கல்வி பயிலும், பயின்ற மாணவ, மாணவியரை கொண்டு காலியான சி, டி பிரிவு பணியிடங்களை விண்ணப்பதாரர் தகுதியின்படி நிரப்ப பரிசீலிக்கப்படுகிறது. இதற்கான விண்ணப்பத்தை புதுக்கோட்டை மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகம் (04322-261266) அல்லது www.socialdefence.tn.gov.in இணையதளத்தில் பதிவிறக்கம் செய்யலாம். உரிய சான்றிதழ்களின் நகல்களை இணைத்து இயக்குநர், சமூக பாதுகாப்புத்துறை, எண்:300, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, கெல்லீஸ், சென்னை-600 010 என்ற முகவரிக்கு ஆகஸ்ட் 19க்குள் விண்ணப்பிக்கலாம். விவரங்களுக்கு 044-26426421ல் தொடர்பு கொள்ளலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**